| | | | |
|---|---|---|---|
| Headline | **HIV And Aids Awareness For Public** | | |
| Date | **16 Apr 2010** | Language | **Tamil** |
| MediaTitle | **Tamil Nesan** | Page No | **4** |
| Section | **News** | Article Size | **150 $cm^2$** |
| Journalist | **N/A** | Color | **Black/white** |
| Frequency | **Daily** | ADValue | **291** |
| Circ / Read | **45,000 / 124,000** | PRValue | **873** |



# எச்.ஐ.வி, எய்ட்ஸ் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு -நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வலியுறுத்து

**கோலாலம்பூர், ஏப். 16-**

எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை சமூகத்தினருக்கு வழங்குவதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கடப்பாடுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

எச்.ஐ.வி, எய்ட்ஸால் விளையக் கூடிய அபாயங்கள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவ தோடல்லாமல் அதன் பாதிப்பிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று மேலவை தலைவர் டத்தோ ஓங் ஃபூன் மெங் தெரிவித்தார். நாட்டில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையை குறைக்க இது பெரிதும் உதவும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிப்புற்றவர்களின் பால் நாம் அக்கறை செலுத்த வேண்டும். வரையறையற்ற உறவு முறைகளால் மட்டுமே எல்லோருக்கும், குறிப்பாக பெண்களுக்கு எச்.ஐ.வி. பரவுவதில்லை என்பதை கருத்தில் கொண்டு நாம் செயல்பட வேண்டும் என்றார் அவர். நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று எச்.ஐ.வி, எயிட்ஸ் விழிப்புணர்வு கண்காட்சியை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார். மலேசிய எயிட்ஸ் மன்றத் தலைவர் பேராசிரியர் டாக்டர் அடீபா கமருல்ஜாமான், மேலவை துணை தலைவர் டத்தோ அர்மானி மஹிருடின் மற்றும் மக்களவை துணை தலைவர் டத்தோ ரோனால்டு கியாண்டி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். தனியார் அமைப்புகள், கழகங்கள், தனியார் நிறுவனங்கள் அரசு அமைப்புகள், அரசு சார்பற்ற அமைப்புகள் போன்றவையும் இளையோரிடத்தே இதன் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றிட முடியும் என்று அவர் குறிப்பிட்டார். நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியில் இளைய சமூகத்தினரே இன்றியமை யாத சக்தியாக விளங்குவதால் அவர்களின் ஆரோக்கிய நலன் குறித்த விழிப்புணர்வு மிக மிக அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.